ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய ஸ்ரீமத் வரத குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

## நம்பெருமாள், கோயில் கோமாண்டூர் இளையவில்லி ஸ்வாமி – வருஷதிருநட்சத்திரம் - சித்திரை - ரேவதி



### தனியன்

சைத்ரே ரேவதி ஸஞ்ஜாதம் ஸௌம்ய ஜாமாதரம் ப்ரபும் /
வந்தே வாதிஸல்ய நிலயம் கல்யாணமுணஸாகரம் //

லஷ்மீகல்பலதோத்துங்க ஸ்தநஸ்தபகசஞ்சல: /
ஸ்ரீரங்கராஜப்ருங்கோ மே ரமதாம் மாநஸாம்புஜே //

### நம்பெருமாள் அருளிச்செய்தது

ஸ்ரீஸைலே ஸதயாபாத்ரம் தீபக்யாதி குணார்ணவம் /
யதீந்தரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் //

## ஸ்ரீரங்கநாதஸ்தோத்ரம் (ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்தது)

ஸப்தப்ராகா மத்யே ஸரஸிஜ முகுளோத் பாஸமாநே விமாநே
காவேரீ மத்யதேஸே ம்ருதுதர பணிராட்போகபர்யங்க பாகே /
நித்ராமுத்ராபி ராமம் கடிநிகடஸிர: பார்ஸ்வவிந்யஸ்தஹஸ்தம்
பத்மாதாத்ரீகராப்யாம் பரிசத சரணம் ரங்கராஜம் பஜேSஹம் //

## வாழித்திருநாமம்

### பெரிய பெருமாள்

திருமகளும் மண்மகளும் சிறக்க வந்தோன் வாழியே
செய்யவிடைத் தாய்மகளார் சேவிப்போன் வாழியே
இருவிசும்பில் வீற்றிருக்கு மிமையவர்கோன் வாழியே
இடர்கடியப் பாற்கடலை எய்தினான் வாழியே
அரிய தயரதன் மகனாயவதரித்தான் வாழியே
அந்தரியாமித்துவமு மாயினான் வாழியே
பெருகி வரும் பொன்னி நடுப் பின்துயின்றான் வாழியே
பெரியபெருமா ளெங்கள்பிரா னடிகள் வாழியே.

### பெரிய பிராட்டியார்

பங்யப் பூவிற் பிறந்த பாவை நல்லாள் வாழியே
பங்குனியில் உத்திரநாள் பாருதித்தாள் வாழியே
மங்கையர்கள் திலதமென வந்த செல்வி வாழியே
மாலரங்கர் மணிமார்பை மன்னுமவள் வாழியே
எங்களெழிற் சேனைமன்னர்க் கிதமுரைத்தாள் வாழியே
இருபத்தஞ்சுட்பொருள் மாலியம்புமவள் வாழியே
செங்கமலச் செய்யரங்கம் செழிக்க வந்தாள் வாழியே
சீரங்கநாயகியார் திருவடிகள் வாழியே.

(பெரிய பெருமாளுக்கும் நம்பெருமாளுக்கும் ஒரே வாழித்திருநாமம்)

## மங்கள ஸ்லோகம்

லஷ்மி சரண லாசஷாங்க ஸாசஷாச்ச்ரீவத்ஸ வசஷஸே /
சேஷமங்கராய ஸர்வேஷாம் ஸ்ரீரங்கேஸாய மங்களம் //

இவருடைய பெருமையை எடுத்து உரைக்கும் உபதேசரத்தினமாலை பாசுரம்

50ஆம் பாசுரம்

நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
யென்பர். அவரவர்தம் மேற்றத்தால் - அன்புடையோர்
சாற்று திருநாமங்கள் தானென்று நன்னெஞ்சே
ஏத்ததனைச் சொல்லி நீ யின்று.

அரையர் கொண்டாட்டம் *

மதகரிபோல் மதிளரங்கத்தே துயிலும் அழகிய மணவாளப்பெருமாள்
மண்ணில் பெருமாளென்றார்க்கெல்லாம் பெருமாள்
மன்னுவிபீடணர்க்கு இலங்கையளித்த பெருமாள்
ஸ்வாமி அவதார தேவராகிய தெய்வசிகாமணியே !

*நன்றி : ஸ்ரீ உ.வே.Dr.V.V.ராமாநுஜன் ஸ்வாமி

கோயில் கோமாண்டூர் இளையவில்லி ஸ்வாமி

தனியன்

ஸ்ரீகௌஸிகாந்வய மஹாம்புதி பூர்ணசந்த்ரம் /
ஸ்ரீபாஷ்யகார ஜநநீ ஸஹஜா தநூஜம் //

ஸ்ரீஸைலபூர்ண பதபங்கஜ ஸக்தசித்தம் /
ஸ்ரீபாலதந்வி குருவர் யமஹம் பஜாமி //

ஸ்ரீயதீந்த்ர மாத்ஷ்வ ஸ்ரீய: ப்ரதிதார்யபதே ஸ்தித: /
மூலபூத: கௌசிகாநாம் தம் வந்தே பாலதந்விநம் //

எம்பெருமானார் ஏற்படுத்திய 74 சிம்மாசனாதிகளில் இவரும் ஒருவர் ஆவார். இவர் கௌசிக கோத்திரத்தில் அவதரித்தார். இவர் இராமானுஜருடைய சிறிய தாயாரின் திருக்குமாரர். பெரியதிருமலை நம்பியின் மருமகன் ஆவார். ஆகையால் பெரியதிருமலை நம்பகளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு இருந்தார். இவர் வடமொழியில் பாலதந்வி என்று அழைக்கப்பட்டார்.

நம்பெருமாள், கோயில் கோமாண்டூர் இளையவில்லி ஸ்வாமி திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: